சமூகத்தின் நெருக்கடியான காலகட்டத்தில் மிகச்சிறந்த தலைவராகத் திகழ்கிறார்!

தமிழ்நாட்டின் உரிமைகளை உயர்த்திப் பிடிக்கும் நமது முதல்வருக்கு துணை நிற்போம்!

சென்னை கிழக்கு மாவட்டம் – அம்பத்தூர் பொதுக்கூட்டத்தில் பீட்டர் அல்போன்ஸ் பேச்சு!

சென்னை, டிச.24-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில், மாவட்ட இளைஞரணி சார்பில் .நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில், "சமூகத்தின் நெருக்கடியான கால கட்டத்தில் மிகச்சிறந்த தலைவராகத் திகழ்கிறார்" என்றும், "தமிழ்நாட்டின் உரிமைகளை தூக்கிப் பிடிக்கும் தலைவரான - நமது முதல்வருக்கு துணை நிற்போம் " என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசிய தாவது:-

இந்தப் பிறந்தநாள் விழா கதாநாயகனாக நம்முடைய வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் 'திராவிட இளவல்' என்று நாம் அன்போடு அழைக்கும் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நூறாண்டு காலம் நோய் நொடி இல்லாமல் வாழ்ந்து, தமிழ்நாட்டிற்கும் தமிழ் மண்ணுக்கும் திராவிடப் பண்பாட்டிற்கும், இனத்திற்கும் மதச்சார்பின்மைக்கும்- சமூக நீதிக்கும் ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சிக்கும் ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கும், தொடர்ந்து பணியாற்றுவதற்கான உடல்நலத்தையும் மனநலத்தையும் இறைவன் அவருக்குத் தர வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் நான் அவரை வேண்டி, வாழ்த்துகிறேன்.

மழை மிரட்டிக் கொண்டிருக்கிறது. சிறு தூறலாக இருக்கின்ற வரை அது அனுமதிக்கின்ற வரை பேசுவோம். பேச முடியாத கட்டத்தில் வாழ்த்துகளை நிறைவாகத் தெரிவித்துவிட்டு விடை பெறுவோம்.

என் அன்பிற்குரிய நண்பர்களே… ஒவ்வொரு தலைமுறைக்கும் அந்த கால ஓட்டத்திற்கு தகுந்த தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். இன்று நம்முடைய முதலமைச்சரோ கேரளத்தில் இருக்கிறார். இன்று கேரளத்தில் சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நல்ல நேரத்தில், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக, இன்றைக்கு கேரள மண்ணில் இருக்கிறார். கேரள மண்ணில் தமிழ்நாட்டின் முதலமைச்சரும், கேரளத்தின் முதலமைச்சரும் ஒன்றாக இணைந்து 'வைக்கம் வீரர்' என்று கொண்டாடப்படுகின்ற தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவாகக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்தைப் புதுப்பித்து, அவருடைய நினைவிற்கும், அவர் ஆற்றிய பணிகளுக்கும், அவர் ஆற்றிய பணிகளின் மூலம் இந்தச் சமூகம் பெற்றுக் கொண்டிருக்கும் நன்மைகளுக்கும் எடுக்கின்ற நன்றியறிதல் விழாவாக அந்த விழாவை இன்றைக்கு அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நூறாண்டு காலகட்டத்தை நாம் கடந்து வந்திருக்கிறோம். நூறாண்டுக்கு முன்னால் தந்தை பெரியார் அவர்கள் ஒரு போராட்டம் நடத்துவதற்குத் தேவைப்பட்ட ஒரு தலைவராக இருந்தார். நூறாண்டுக்கு முன்னால் வைக்கத்தில் ஏன் அந்தப் போராட்டம் நடந்தது என்ற வரலாறு நம்முடைய இளைஞர்கள் எத்தனை பேருக்குத் தெரியும்? என்று எனக்குத் தெரியவில்லை.

இன்று தமிழ்நாட்டில் புதிய கட்சிகள் எல்லாம் வருகின்றன. சில கட்சிகள் நேற்று ஆரம்பித்து, இன்று கொடியைப் பார்த்து, நாளை காலை கோட்டையில் முதலமைச்சராகக் கொடியேற்ற வேண்டும் என்ற கனவுகளோடு, நூறாண்டுகள் இந்த மண்ணோடு கலந்து, இந்த மண்ணுக்கு உழைத்து, உயிர் - உடல் அத்தனையும் தியாகம் செய்த தலைவர்களை எல்லாம் பார்த்து. எள்ளி நகையாடுகின்ற அளவிற்கு ஒரு கேவலமான அரசியல் இன்று தமிழ்நாட்டில் விலை பேசப்படுகிறது. ஆனால், இவர்களுக்கெல்லாம், இவர்கள் பின்னால் செல்லும் இளைஞர்களுக்கெல்லாம் இந்த வரலாறு தெரியுமா?

நூறாண்டுக்கு முன்னால் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் போராட்டத்தில் ஏன் சென்றார்? வைக்கம் போராட்டம் என்பது, ஏதோ ஒரு ஆலயத்திற்குள் செல்வதற்காக நடந்த உரிமை போராட்டம் அல்ல. அவர் வாழ்ந்த காலத்தில், குறிப்பாக கேரளத்தில், மன்னராட்சி இருந்த மண்ணில் ஆலயங்களுக்குள்ளே தீயர், புலையர், சாணார், நாடார், பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் ஏறக்குறைய 32 சமூகங்களுக்கு அந்த ஆலயங்களுக்குள் செல்வதற்கான அனுமதி கிடையாது. நான் பிறந்த சமூகம் உட்பட. ஆலயங்களுக்குள் உள்ளே செல்லவில்லை என்பது அனைத்து இடத்திலும் நடந்த விஷயம்.

வைக்கம் கொடுமை!

ஆனால், வைக்கத்தில் நடந்த கொடுமை என்னவென்று சொன்னால், அந்த ஆலயம் இருந்த தெருக்களில்கூட யாரும் நடக்க முடியாது. அந்த 32 சமூகங்களை சார்ந்தவர்கள். அந்தத் தெருக்களில் நடக்க முடியாத கொடுமை என்னவென்று சொன்னால், அந்தத் தெருக்களில்தான் தாலுகா ஆபிஸ் இருந்தது; அந்த தெருக்களில்தான் நீதிமன்றம் இருந்தது; அந்தத் தெருவில்தான் அரசு அலுவலகங்கள் இருந்தன. ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த வழக்கறிஞர், வழக்கறிஞர் உடையோடு நீதிமன்றத்தில் ஆஜராக அந்தச் சாலையில் நடந்து செல்கிறார். அவரை அந்த ஆதிக்க சமூகம் நடக்க அனுமதிக்கவில்லை. மன்னருடைய கட்டளை அது. இந்த ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இடத்தில் நடக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அப்படி நடக்கின்றவர்களை தடுத்து நிறுத்தி அடிக்கக்கூடிய உரிமைகளையும் அந்த அரசாங்கம் ஆதிக்க சாதியினருக்கு வழங்கியிருந்தது.

அந்த மக்கள் போராடினார்கள். போராடுகின்ற மக்களுக்கு போராட்டத்தை தொடர்ந்து நடத்த சக்தி இல்லை. மதுரையில் இருந்த ஜார்ஜ் ஜோசப் என்று ஒரு வழக்கறிஞர். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். அவர் கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டவர். மதுரையில் தொழில் செய்கிறவர். இதைத் தெரிந்து அங்கு போராட்டத்திற்கு சென்று பார்த்துவிட்டு, இந்தப் போராட்டம் மிக வலுவிழந்து, ஒரு கட்டத்தில் செயலிழந்து போகுமோ என்று அஞ்சி, அங்கிருந்து தந்தை பெரியாருக்கு SOS என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். 'சேவ் அவர் சோல்' என்று கை தூக்கி எங்களை காப்பாற்றுங்கள் என்று கேரள காங்கிரசார் குரல் கொடுக்கிறார்கள்.

தந்தை பெரியாருக்கு அந்தக் கடிதம் வருகிறது. மதுரையில் பிரச்சாரத்தில் இருக்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர். இந்தக் கடிதம் வந்தவுடனே, இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்கான அருமையான காரணம் என்று தெரிந்த தந்தை பெரியார் அவர்கள், மூட்டை முடிச்சுகளோடு தன்னுடைய அருமை மனைவி நாகம்மையாரிடம் என்ன சொல்கிறார்? மருத்துவரைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லி விட்டு, கேரளாவிற்கு சென்று அந்தப் போராட்டத்தை துவங்குகிறார். அந்தப் போராட்டம் நடக்கிறது. அதிலிருந்து, பயந்து ஒடுங்கி இருந்த மக்கள் இந்தச் சிங்கமாக கர்ஜிக்கின்ற மனிதனைப் பார்த்தவுடனே, அடங்க மறுத்தவன் - நிமிர்ந்து எழுந்தவன் - உரிமைக்குரல் கொடுப்பவன் - யாராலும், எதற்காகவும் விலை பேச முடியாத ஒரு மாபெரும் தலைவன்; இந்த மண்ணுக்கு வந்துவிட்டான் என்று தெரிந்தவுடனே, கேரள மக்கள் தந்தை பெரியார் பின்னால் அணிவகுக்கிறார்கள். அவர் கேட்கிறார், ஒரு கேள்வி? இந்தத் தெருவில் நாய் செல்லலாம்; இந்தத் தெருவில் பூனை செல்லலாம்; இந்தத் தெருவில் பன்றி செல்லலாம்; ஆனால், இந்தத் தெருவில் என் உடன் பிறந்த மனிதன் போகக் கூடாதா? என்று கேட்ட கேள்வி கேரள முழுவதும் எதிரொலிக்கிறது. ஆயிரக்கணக்கில் மக்கள் திரளுகிறார்கள். இடையில், அங்கு திவானாக இருந்த சர் சி.பி.ராமசாமி ஐயர் போன்ற மிகப்பெரிய சனாதனிகள். அந்த நாட்டில் ஆட்சியில் இருந்த ராணிக்கு ஆலோசனை சொன்னவர்கள்.

தந்தை பெரியார் அவர்கள் தலைவராக ஏற்றுக் கொண்ட மகாத்மா காந்தி என்ற மாமனிதருக்குகூட இந்தப் போராட்டத்தை பற்றிய சந்தேகங்கள் நிறைய இருந்த சூழ்நிலையில், ஒரு தெளிவான தலைவன்; ஒரு தெளிவான கொள்கை; ஒரு உறுதியான நடவடிக்கை; மக்களுக்காக முழு நேரம் உழைக்க வேண்டும் என்ற ஆத்மார்த்தமான அர்ப்பணிப்பு; வாழ்ந்தாலும் பரவாயில்லை, வீழ்ந்தாலும் பரவாயில்லை, என் கொள்கைகள் தோற்று விடக்கூடாது என்கிற நெஞ்சம் உறுதியோடு போராடிய ஒரு தலைவன் இருந்த காரணத்தினால்தான், 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்தைப் பெற்று ஒரு மாபெரும் சரித்திரத்தை நடத்தி முடித்த ஒரு மாபெரும் தலைவனாக தந்தை பெரியார் அவர்கள் இன்று நிற்கிறார். அவருக்குதான் இன்று நூற்றாண்டு விழா. இது நூறாண்டுகளுக்கு முன்பு.

சமூக சதி - சமூக அநீதி!

அன்று கோவில்களுக்கு செல்கின்ற தெருக்களுக்குள் நமக்கு நடக்க அனுமதி இல்லை. அந்தச் சமூக சதி முடிந்து விட்டதா? அந்த சமூக அநீதி முடிந்து விட்டதா? அதிகாரம் மறுப்பு நின்று விட்டதா? பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பட்டியல் இன மக்களுக்கு பழங்குடி மக்களுக்கு அதிகாரம் கிடைத்து விட்டதா?

75 ஆண்டு காலம் சுதந்திரம், குடியரசு, யார் நினைத்தாலும் சட்டமன்ற உறுப்பினராகலாம்; யார் நினைத்தாலும் நாடாளுமன்ற உறுப்பினராகலாம்; யார் நினைத்தாலும் முதலமைச்சராகலாம்; ஆனால் யார் நினைத்தாலும் ஆலயத்திற்கும், கர்ப்ப கிரகத்திற்குள்ளும் போக முடியாது.

இன்றைக்கு அதிகார பூட்டின் சாவி யாரிடம் இருக்கிறது? கடந்த 2, 3 நாட்களாக வரும் செய்திகளைப் பார்க்கிறோம். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு என்ற ஒரு திட்டத்தை இந்த ஒன்றிய மோடி அரசு வகிக்கிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய வர்களுக்கான இட ஒதுக்கீடு 10 விழுக்காடு. 100 வேலைகள் இருக்கிறது என்று சொன்னால், 10 வேலைகள் பொருளாதாரத்தில் பின்தங்கிய வர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வேலை. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் எந்த சாதியைச் சார்ந்தவர்கள் என்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சார்ந்த ஏழைகள் அல்ல; தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சார்ந்த ஏழைகள் அல்ல; ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சார்ந்த ஏழைகள் அல்ல; முற்படுத்தப்பட்ட, ஆதிக்கச் சமூகங்களைச் சார்ந்த ஏழைகளுக்கு மட்டுமே அந்த 10 விழுக்காடு. அந்த 10 விழுக்காட்டுக் காரர்களுக்கான இட ஒதுக்கீட்டில் 143 பேருக்கு ஏழைகள் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கி றது. அந்த தனியார் மருத்துவ கல்லூரிக்கு இந்த ஏழைகள் கட்டுகிற கல்வி கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபாய். வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் கட்டணம் கட்டுகிறவன் ஏழை. அவனுக்கு இட ஒதுக்கீடு. அதுவும் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு.

இந்த அம்பத்தூர் பகுதியில் உழைக்கின்ற தொழிலாளர்கள் இருக்கிறீர்கள். அலுவலகத்திற்கு செல்கின்ற ஊழியர்கள் இருக்கிறீர்கள். வீடுகளில் உழைக்கின்ற பெண்கள் இருக்கிறீர்கள். தினசரி ஏதாவது ஒரு பணி செய்து வயிற்றைக் கழுவும் ஏழைகளும் இருக்கிறீர்கள். வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் தன் பிள்ளைக்கு கல்விக் கட்டணம் செலுத்தும் தகுதி உள்ளவர்கள் அம்பத்தூரில் எத்தனை பேர் இருப்பீர்கள்? 100இல் ஒருவர் கூட இருக்க மாட்டார். 1,000இல் ஒருவர் வேண்டுமானால் இருப்பார். அந்த ஆயிரத்தில் ஒருவருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு. என்ன நடக்கிறது என்று நமக்கு தெரிய வேண்டும். ஆயிரத்தில் ஒருவர் அந்த குரூப் அந்த செக்ஷன், அதற்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு. இதற்கு நாம் கட்டுகிற வரிப்பணம்; நீங்கள் கட்டுகிற ஜி.எஸ்.டி.; நாம் கட்டுகிற தொழில்வரி; நாம் கொடுக்கின்ற அத்தனை வரிகளையும் ஒட்டு மொத்தமாக வசூலித்து, அதனால் உருவாக்கப்படுகின்ற கல்லூரிகளில் படிக்கின்றவர்கள் யார் என்றால், இவர்கள்தான் படிக்கிறார்கள். இதைக் கேட்பதற்கு இந்தத் தலைமுறைக்கு ஒரு தலைவர் வேண்டும். இதுதான் ராகுல் காந்தி கேட்டார்.

என் அருமையான தாய்மார்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள். பார்ப்பதற்கே மகிழ்ச்சியாக இருக்கிறது; சந்தோஷமாக இருக்கிறது.

என் தலைவர் ராகுல் காந்தி கேட்டார், அரசாங்கம் எவ்வளவு செலவழித்து, எத்தனை விளம்பரம் செய்து, பெரிய பெரிய அழகிப் போட்டிகள் நடத்துகிறீர்கள் அல்லவா… அந்த அழகிப் போட்டியில் எங்கேயாவது ஒரு தாழ்த்தப்பட்டப் பெண்ணை நீங்கள் அழகியாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்களா? எங்கேயாவது ஒரு பிற்படுத்தப்பட்டப் பெண்ணை அழகியாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்களா? அழகிப் போட்டி வைத்துகூட, அந்த கிரீடம் சூட்டுவதைகூட, ஆதிக்க சாதியினரான நீங்கள்தானே தேர்ந்தெடுக்கப்படுகிறீர்கள். இதைக் கேட்பதற்கு இந்தத் தலைமுறைக்கு ஒரு தலைவர் வேண்டும். அதைத்தான், இங்கே இன்று பிறந்தநாள் கதாநாயகனாக கொண்டாடுகிற உதயநிதி கேட்கிறார்.

விஸ்வகர்மா திட்டம்!

'விஸ்வகர்மா திட்டம்' என்று சொல்லி, இந்த நாட்டில் சவரத் தொழிலாளியாக பிறந்தவன், சவரத் தொழில்தான் செய்ய வேண்டும்; சலவைத் தொழிலாளியாக பிறந்தவன், சலவைத் தொழில்தான் செய்ய வேண்டும்; பறையடித்தவன், பறைதான் அடிக்க வேண்டும்; பனை ஏறுகிறவன், பனைதான் ஏற வேண்டும்; எந்த குலத் தொழில் செய்தானோ, அந்த குலத் தொழிலை செய்வதற்காக ஒரு அரசாங்கத் திட்டம். அதற்காக ஒரு கடனுதவி. நாம் வேறு தொழில் செய்ய நினைத்தால், எனக்கு அந்த கடன் கிடையாது. யார் வீட்டுப் பணம்? மோடி வீட்டுப் பணமா? இல்லை, நம் ஊரில் அண்ணாமலை என்று ஒரு ஆள் இருக்கிறாரே, அவர் வீட்டுப் பணமா?

என்னுடைய மகன் இருக்கிறான். என்னுடைய சகோதரருடைய மகன் இருக்கிறான். சிந்தனைச் செல்வன் இருக்கிறார், அவருடைய மகன் இருக்கிறான். எங்களுடைய குடும்பங்கள் 100, 500 வருடத்திற்கு முன்னால் செய்த தொழில் வேறு. ஆனால், இன்றைக்கு சிந்தனைச் செல்வனின் பையனுக்கு ஒரு ஆசை வருகிறது. நான் நகை தொழில் செய்யப் போகிறேன், தங்க நகை செய்யப் போகிறேன். தங்க நகை செய்வது எப்படி என்று நான் படிக்கப் போகிறேன். எனக்கு அந்தத் திட்டத்தில் உதவி வேண்டும் என்று கேட்டால் கிடையாது. ஏன் கிடையாது? உங்கள் அப்பா தங்க நகை செய்யவில்லை. உங்கள் அப்பா அந்தத் தொழிலை செய்திருந்தால்தான், உனக்கு அந்தத் தொழிலுக்கு கடன். இதைக் கேட்பதற்கான இந்தத் தலைமுறையின் தலைவன்தான் உதயநிதி.

இந்த அநீதி தொடர்கிறது நண்பர்களே… தந்தை பெரியார் காலத்தில் சாலைகளில் நடக்கவிடவில்லை. ஆலயங்களுக்குள் அனுமதி இல்லை. ஆனால், இன்று 2024 டிசம்பர் 11ஆம் தேதி இந்தச் சென்னையில் இருக்கின்ற ஐ.ஐ.டி. என்று சொல்லும் ஒன்றிய அரசு நடத்தும் 'இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி'. இந்தத் தேசத்தின் முதல் அரசாங்கமான பண்டித நேரு அவர்களின் தலைமையில் இருந்த அரசாங்கத்தில் முதல் கல்வி அமைச்சர் பண்டிதர் மௌலானா ஆசாத் அவர்கள் தொடங்கி வைத்த நிறுவனம்.

அந்த நிறுவனத்திற்குள் சென்று பாருங்கள். அங்கு படித்தவர்கள்தான் இன்று கலிஃபோர்னியாவில் சாஃப்ட்வேர் இன்டஸ்ட்ரியலில் இன்ஜினியராக இருக்கிறார்கள். கூகுள் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்கள். மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்கள். பேஸ்புக், வாட்ஸ்அப் நடத்துகின்ற மிகப்பெரிய அதிகாரிகள். மாதம் 50 கோடி, 100 கோடி சம்பளம் வாங்குகிறவர்கள் யார் என்று சொன்னால், இந்த ஐ.ஐ.டி. இல் படித்தவர்கள்.

அங்கே சென்று பாருங்கள் நண்பர்களே… அந்த வளாகத்திற்குள் 100 பேராசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், 98 பேர் ஒரே சாதியைச் சார்ந்தவர்கள். வேறு சாதி பேராசிரியர்களே கிடையாது. வேறு சாதிக்காரர்களுக்கு உள்ளே இடமே கிடையாது. மாணவர்கள் யார்? முழுக்க முழுக்க ஒரே சாதியைச் சார்ந்தவர்கள். தப்பித் தவறி உங்களுடைய பிள்ளைகள், சிந்தனைச் செல்வன், சாமுவேல் இவர்களுடைய பிள்ளைகள் உள்ளே சென்றால், மூன்று மாதத்திற்கு மேலே அங்கே இருக்கவிட மாட்டார்கள். ஒன்று அந்த பையன் தற்கொலை செய்து கொள்வான். இல்லை, படிக்க மாட்டேன் என்று வெளியே வந்து விடுவான். இதைக் கேட்பதற்கான இந்த தலைமுறைக்கு தலைவன்தான் உதயநிதியும், ராகுல் காந்தியும்.

எதற்காக அவர்களை வாழ்த்துகிறோம்? 55 வருடம் பொது வாழ்வில் இருக்கிறேன். இன்னும் புதிதாக எந்தப் பதவியும் பார்க்கவில்லை. ஆனால் இந்தத் தலைவர்களை எல்லாம் எதற்காக நாம் வாழ்த்துகிறோம் என்று சொன்னால், இந்தச் சமூக நீதி பயணத்தின் சங்கிலி அருந்திவிடக் கூடாது.

அருமையாக சொன்னார் சிந்தனைச் செல்வன். ஆபத்து எங்கே இருந்து வருகிறது? என்று சொன்னார். மிகவும் கவனமாக பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

2013இல் மன்மோகன் சிங் அரசாங்கம் மிக உச்சமாக நடந்து கொண்டிருந்த வேலை. அந்த அரசாங்கத்தின் சாதனைகள், மிகப்பெரிய சாதனைகள். அந்த ஆட்சிக் காலத்தில் 28 கோடி பேரை வறுமைக் கோட்டின் எல்லைக்கு மேலே உயர்த்தியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு மன்மோகன் சிங்கை பாராட்டியது. அமெரிக்காவோடு புதிதாக அணுசக்தி ஒப்பந்தம் போட்டுக் கொண்டதால், இந்தியத் தொழில்கள் மேலும் வளர்ந்தன. இந்தியாவின் ஜி.டி.பி. கூடியது.

ஆனால், ஒரே நாள் ஒரு திட்டம். ஒரு ஆள் வந்தார், பெரிய காந்தி குல்லா போட்டு, ஜிப்பா போட்டு, நான் ஊழலுக்கு எதிராக போராடப் போகிறேன் என்று காந்தி சமாதியில் சென்று உட்கார்ந்தார். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அண்ணா ஹசாரே என்ற ஒரு ஆள். அந்த ஆளை எங்கே என்று இப்போது நீங்கள் தேடுங்கள்… டி.வி.க்காரர்களை பார்த்தீர்கள் என்றால், 24 மணி நேரமும், அவர் உட்கார்ந்தார்; அவர் எழுந்தார்; அவர் குனிந்தார்; அவர் நிமிர்ந்தார்; மாறி மாறி டி.வி.யில் காண்பித்து, அந்த ஆள் நேராக காந்தி சமாதிக்கு சென்று, தன் தொப்பியை கீழே போட்டு, டமார் என்று காந்தி முன்னால் விழுந்தவுடன், அனைவரும் காந்தியே உயிர் பெற்று வந்து விட்டார் என்று நினைத்து விட்டார்கள். அந்த ஆள் உண்ணாவிரதம் உட்கார்ந்தார். உண்ணாவிரதம் உட்கார்ந்தவுடனே, நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு எல்லாம் பெரிய கோவா வேஷம் வந்து, ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் திரண்டார்கள். ஊழலுக்கு எதிராக போராடக்கூடிய அண்ணா ஹசாரே வந்துவிட்டார்.

அவருக்கு பக்கத்தில் தாடி வைத்த சாமியார் ஒருவர் உட்கார்ந்திருந்தார். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா என்று பார்க்கிறேன். பாபா ராம்தேவ் என்று ஒருவர் இருந்தார். அவர் யார் என்று கேட்டீர்கள் என்றால், வைத்தியத்தில் என்ன மருந்து விற்றார் என்றால், மற்ற அனைவருமே குழந்தை இல்லை என்றால், குழந்தை பெறுவதற்கு மருந்து விற்பார்கள். அந்த ஆள் ஆண் குழந்தை பெறுவதற்கு மருந்து விற்றார். அப்படி ஒரு அதிசயமான விஞ்ஞானி. ஒரு நாளைக்கு 18 கோடி லிட்டர் பசு எண்ணெய் விற்றார். 18 கோடி லிட்டர் என்றால், எப்படி கிடைக்கும்? எத்தனை மாடு வேண்டும்? அது எங்கே வளர்க்க வேண்டும்? யாராவது நினைத்தால், கிடையாது. ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் இப்போது வழக்கு போட்டு, அவர் சொன்னது எல்லாம் அயோக்கியத்தனம்; அவர் சொன்னது எல்லாம் பொய் என்று கண்டித்திருக்கிறார்கள். அந்த சாமியார் வந்து உட்கார்ந்திருந்தார்.

கிரண்பேடி என்று ஒரு அம்மா வந்தது. நம்முடைய பாண்டிச்சேரியில் கவர்னராக வந்து உட்கார்ந்தது. அர்ஜுன் கெஜ்ரிவால் என்று அப்போது டெல்லியில் முதலமைச்சராக இருந்தவர் வந்து உட்கார்ந்தார். சாந்தி பூசணின் மகன் பிரசாந்த் வந்து உட்கார்ந்தார்.

பத்திரிகைகளின் நெருக்கடி!

என் அருமை நண்பர்களே… மன்மோகன் சிங் அரசு நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டது. பத்திரிகைகள் பெரிய பிரச்சாரம் செய்தார்கள். ஊழல்… ஊழல்… ஊழல்… 2ஜி ஊழல்… எத்தனை லட்சம் கோடி, அவன் பூஜ்ஜியம் போட்டுக் கொண்டே இருந்தான். டீக்கடை யில் உட்கார்ந்து ஒருவன் படித்தான். பேப்பரில் வந்தது. எத்தனை லட்சம் கோடி ஊழல்? டீக்கடையில் படித்துக் கொண்டிருந்தவன் சைபரை எண்ணிக் கொண்டே இருந்தான். 1, 2, 3, 4, 5 என்று அவனால் எண்ண முடியவில்லை? இவ்வளவு பெரிய ஊழலா? என்று சொல்லிவிட்டு, உடனே முடிவு செய்தார்கள். பத்திரிகைகளின் நெருக்கடி தாங்க முடியவில்லை.

கலைஞர் அவர்களின் ஆட்சிக்கு மிகப்பெரிய சவால். நம்முடைய அருமைக்குரிய சகோதரர் ராஜா அவர்கள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர். அவருடைய காலத்தில் தொலைப்பேசிக்கு என்ன கட்டணம் கொடுத்தோம் என்பதை தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆனால், என்ன பெரிய பிரச்சாரம் செய்யப்பட்டது? இந்தியாவின் சரித்திரத்தில் இதுவரை நடந்திராத மாபெரும் ஊழல் என்று எல்லோரும் பிரச்சாரம் செய்து, பத்திரிகைகளில் எழுதி, தொலைக்காட்சிகளில் விவாதம் செய்து, கடைசியில் நம்முடைய அருமைக்குரிய நண்பர் ராஜாவையும், அன்பிற்குரிய சகோதரி கனிமொழி அவர்களையும் கைது செய்து, சிறையில் ஒரு வருடம் வைத்திருந்தார்கள்.

அந்த அறிக்கை கொடுத்தவன் யார்? அவன்தான் வினோத் ராய் என்று சொல்லக்கூடிய இந்த நாட்டின் தலைமை கணக்கு அதிகாரி. சி.ஏ.ஜி. இன்று முடிந்து விட்டது. வழக்கு நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி சைனி சொன்னார், அந்த வழக்கு போட்ட சி.பி.ஐ.ஐப் பார்த்து, "நீங்கள் எல்லாம் போலீஸா? நீங்கள் எல்லாம் ஒரு சாதாரண போலீஸ் ஸ்டேஷனில் சப்இன்ஸ்பெக்டராக விசாரிக்கும் அளவிற்குக்கூட விசாரணை இல்லையே. இந்த வழக்கில் என்ன இருக்கிறது" என்று சொல்லி, அந்த அதிகாரிகள் மேலேயே அந்த வழக்கில் கோப்பை தூக்கி அடித்து அவர்கள் இரண்டு பேரையும் விடுதலை செய்தார்கள்.

மன்மோகன் சிங் அரசே, ஊழல்… ஊழல்… என்று சொன்ன காரணத்தினால் மக்கள் மனம் மாறி, ஒரு நேர்மையாக, உத்தமமாக, இந்த தேசத்தின் வரலாற்றில் இவ்வளவு எளிமையாக ஒரு பிரதமர் வாழ்ந்தது இல்லை என்ற வரலாற்றுக்குரிய மன்மகன் சிங்கின் அரசு வீழ்ந்தது. இது எல்லாம் எதனால் என்று தெரியுமா? இந்த அன்னா ஹசாரே கம்பெனி.

இது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஏற்பாடு என்று யார் சொல்கிறார்? அவர்களோடு சென்ற பிரசாந்த் பூசண் இப்போது சொல்கிறார். அவர்களோடு மேடையில் உட்கார்ந்து உண்ணாவிரதம் இருந்த பிரசாந்த் பூசண் இப்போது என்ன சொல்கிறார் என்று சொன்னால், இந்த அன்னா ஹசாரேவை ஏற்பாடு செய்தது, பாபா ராம்தேவை ஏற்பாடு செய்தது, கிரண்பேடியை ஏற்பாடு செய்தது, இதெல்லாம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஏற்பாடு செய்தது. அவர்கள் மேடைக்கு வரவில்லை; அவர்கள் வெளிச்சத்திற்கு வரவில்லை; அவர்கள் யாரும், எந்த இடத்திலும் இல்லை. ஆனால் ஆர்ப்பாட்டம் நடந்தது; போராட்டம் நடந்தது; பத்திரிகைகள் எழுதினார்கள்; மக்கள் நம்பினார்கள்; அரசு வீழ்ந்தது; வீழ்ந்த அரசு வீழ்ந்தது; இன்று மோடி அரசு வந்து 10 வருடம் ஆகிவிட்டது. இன்றைக்கு டெலிபோன் என்ன விலை என்று பாருங்கள்… இன்றைக்கு நடக்கும் ஊழல்கள், அதைப் பற்றி யாரும் பேச முடியுமா?

மன்மோகன் சிங் அரசில், ஒரு சட்டத்துறை அமைச்சர் அட்டார்னி ஜெனரலிடம் பேசினார் என்ற காரணத்திற்காக மறுநாள் ராஜினாமா செய்தார். ஒரு ரயில்வே அமைச்சர், அவருடைய மைத்துனர் ஏதோ சிபாரிசு செய்தார் என்ற குற்றச்சாட்டு பாராளுமன்றத்தில் வந்தவுடனே ராஜினாமா செய்தார். கலைஞருடைய அருமை மகள், எந்தக் குற்றமும் செய்யாத ஒரு அற்புதமான பெண். நான் மிகவும் நேசிக்கின்ற மதிக்கின்ற ஒரு சுயமரியாதைச் சிந்தனையுள்ள மிகவும் அற்புதமான சகோதரி கனிமொழி அவர்கள் ஒரு ஆண்டு சிறையில் இருந்தார். ராஜா இருந்தார். இன்று எந்த வழக்கு நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள்? எந்த உண்மை வெளிவந்திருக்கிறது? இப்படி பொய்யாக குற்றம் சாட்டிய வினோத் ராய் இன்று மிகப்பெரிய பொறுப்பில் இருக்கிறார். அவருக்கான மிகப் பெரிய பொறுப்பு தரப்பட்டிருக்கிறது. மோடியும், அமித்ஷாவும் குஜராத்தில் நடந்த மிகப்பெரிய வன்முறைகளில் சம்பந்தப்படவில்லை என்று தீர்ப்பு சொன்ன நீதிபதி சதாசிவம் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் இவர்களுக்கு உதவி செய்த அத்தனை அதிகாரிகளும் மிகப் பெரிய பொறுப்பில் உட்கார்ந்து கொண்டார்கள். இன்று 10 ஆண்டுகளுக்குப் பிறகு, நம்மால் ஒன்றியத்தில் இழந்த அதிகாரத்தை பெற முடியவில்லை.

கட்டமைக்கும் பிம்பம்!

என் அன்பிற்குரிய நண்பர்களே… 2013இல் டெல்லியில் என்ன நடந்ததோ, அதுதான் 2024இல் தமிழ்நாட்டில் நடப்பதற்கான செயல்கள் துவங்கி இருக்கின்றன. மேடைக்கு வருகின்றவர்கள் யார் என்று நீங்கள் உற்றுப் பார்த்தால் தெரியும். இவர்களை யார் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். இவர்களுக்கு ஏன் இவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இங்கே இருக்கும் பா.ஜ.க.வை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வகுப்புவாத சித்தாந்த அரசியலை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பாசிச அரசியலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவே, அன்னா ஹசாரேவைப்போல, கிரண்பேடியைப் போல, பாபா ராம்தேவைப்போல, ஒரு சிலரை ஜோடித்து அலங்கரித்து இவர்கள்தான் ஊழலுக்கு எதிராக போராளிகள் என்று ஒரு பிம்பத்தை கட்டமைப்பதற்காக கொண்டு வந்து நிறுத்தப்பட்ட நாடகம்தான் இன்று தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாற்று மருந்துதான் உதயநிதி.

அங்குதான் நாம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். நம்முடைய சிந்தனைச் செல்வன் மிகத் தெளிவாக இருக்கிறார். நான் அதை எல்லாம் மிகவும் அரசியல் பேச ஆசைப்படவில்லை. ஏன் என்றால், நம்முடன் இருப்பவர்கள் மீதுதான் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நாட்டில் இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், நம்கூடே இருந்து கொண்டு, நம்முடைய மேடையிலேயே அமர்ந்து, நமக்கு கிடைக்கின்ற மரியாதைகளை கவுரவங்களை எல்லாம் பகிர்ந்து கொண்டு, நம்மைப் போலவே பேசி சிரித்து மகிழ்ந்து, ஆனால் அந்தரங்கத்தில் நம்முடைய காலை அறுக்கும்… தனத்தின் உருவங்களின் மீது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

இப்போது, அவர்களுக்கு இந்தியாவில் இரண்டே இரண்டு தான் டார்கெட்!

இன்றைக்கு சுயமரியாதை இயக்கம் மட்டும் நூற்றாண்டு விழாவை கொண்டாடவில்லை. ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறது. சமூக நீதி அரசியல் எப்படி நூறாண்டு ஆகியதோ, அதைப் போல வகுப்புவாத அரசியலுக்கும் நூறாண்டு. இந்த நூற்றாண்டின்போது வகுப்புவாத அரசியல் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைத்துவிட்டது; இந்தியாவில் பல மாநிலங்களில் அவர்களுடைய ஆட்சி நடக்கிறது; முதலமைச்சர்கள் இருக்கிறார்கள்; ஆளுநர்கள் இருக்கிறார்கள்; ஜனநாயக நிறுவனங்களை கைப்பற்றி இருக்கிறார்கள்; உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தீர்ப்பு எழுதுகின்றபோது, நமக்கு பரிதாபமாக இருக்கிறது; பயமாக இருக்கிறது.

நேற்று ஒரு நீதிபதி சொல்கிறார், "இந்த நாட்டின் நிர்வாகம் எப்படி நடக்கும் என்று சொன்னால், இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் நினைக்கின்ற படிதான் நிர்வாகம் நடக்கும்" என்று சொல்லும் அளவுக்கு உயர்நீதிமன்றத்தின் வளாகத்தில் வி.ஹெச்.பி. நடத்துகிற விழாவில் இது போன்ற பேச்சுக்கள் நடக்கின்றன. இதே போன்ற ஒரு சூழ்நிலையில் நம்முடைய போராட்டம் நம்முடைய இயக்கம் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கொள்கைகள் நாம் பயணிக்க எடுத்துக் கொண்டிருக்கின்ற லட்சியங்களை பத்திரமாக பாதுகாக்க வேண்டிய பொறுப்பு யார் யாருடைய கையில் இருக்கிறது என்று சொன்னால், இந்தத் தலைமுறைக்கு வருகின்ற இளைஞர்கள் கையில் இருக்கிறது. அதைத்தான் இளைஞரணியின் நண்பர்கள் இந்த விழாவை நடத்துகிறபோது, நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் இளைஞர்கள், உங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் அவர்களும் ஒரு இளைஞர்தான், சிந்தனைச் செல்வன் போன்ற இளைஞர்கள் நாங்கள் எல்லோரும் ஏறக்குறைய 3, 4 தசாப்தங்களை பொது வாழ்க்கையில் முடித்து விட்டாலும்கூட, இந்த நேரத்திலும் இந்தப் பயணங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான தலைவனும், அவனோடு பயணிக்கின்ற மற்றவர்களும் அடையாளப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காகத்தான் வாழ்த்துகிறோம்.

இந்த தலைமையை பாதுகாக்க வேண்டும் என்று உங்களுக்கு சொல்கிறோம். இந்த தலைமையை கீழே விழுந்து விடாமல் தூக்கிபிடியுங்கள் என்று சொல்கிறோம். ஏன் என்று சொன்னால், ஒரு தலைவன் இருந்தால்தான் ஒரு இயக்கம் நடக்கும்; ஒரு தலைவன் இருந்தால்தான் ஒரு கொள்கையை பேச முடியும்; ஒரு தலைவன் இருந்தால்தான் தொண்டனை தாங்குவான்; தொண்டனை தாங்கினால்தான் இயக்கம் வளரும்; இயக்கம் வளர்ந்தால்தான் லட்சியம் நிறைவேறும்; லட்சியம் நிறைவேறினால்தான் மக்கள் மாண்போடு வாழ்வார்கள்; எனவே, இவ்வளத்திற்கும் மூலம் எங்கே இருக்கிறது என்று சொன்னால், ஒரு உறுதியான தலைவர்.

காலச்சூழல்!

நூறாண்டுகளுக்கு முன்னால் தந்தை பெரியார் எப்படி தேவைப்பட்டாரோ, நூறாண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாபெரும் தலைவர்களாக இருந்த ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல் போன்ற தலைவர்கள் தேவைப்பட்டார்களோ, அண்ணாவைப் போன்ற கலைஞரைப் போன்ற தலைவர்கள் தேவைப்பட்டார்களோ, அதைப்போல காலச் சூழல் மாறுகின்ற போது, ஒவ்வொரு காலத்திற்கும் தலைவர்கள் தேவைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட தலைவர்களாகத்தான் ராகுல் காந்தியைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட தலைவராகத்தான் உதயநிதியைப் பார்க்கிறோம். எனவே, இந்தத் தலைவர்கள் நமக்காக நம்முடைய சந்ததியினருக்காக நம்முடைய தலைமுறைக்காக இந்த தலைவர்கள் தோய்ந்துவிடக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

என் அருமை நண்பர்களே… சட்டமன்றம் 2 நாள் நடந்து முடிந்திருக்கிறது. சட்டமன்றத்திற்குள் நான் நேற்று இருந்தேன். வெளியே இருந்துதான் பார்த்துக் கொண்டிருந்தேன். சட்டமன்றத்திற்குள் நடக்கும் விவாதங்களை எல்லாம் பார்க்கின்றபோது வேடிக்கையாக இருக்கிறது. இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது, அவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளை எல்லாம் பார்த்து நான் சிரித்துக் கொண்டிருந்தேன். நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் அமலுக்கு வருகின்றபோது, நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகின்ற போது, நாடாளுமன்றத்தில் இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்த தம்பிதுரை அவர்கள் இந்தச் சட்டத்தை முழுமையாக வரவேற்று பேசிவிட்டு, இங்கே சட்டமன்றத்திற்குள் வந்து நம்முடைய முதலமைச்சரைப் பார்த்து நீங்கள் ஏன் 10 மாதம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறார். அவ்வாறு கேட்கின்ற போது பழனிச்சாமியைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. எதிர்க்கட்சி தலைவரின் கொள்கை வளர்ச்சியைப் பார்த்து, அவருக்கு தரப்பட்டிருக்கும் விஷயங்களின் பற்றாக்குறையைப் பார்த்து நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அருமையான தம்பி சிந்தனைச் செல்வன் அவர்கள் பேசினார்கள். இந்தத் தமிழ்நாட்டின் உரிமைகளை தூக்கிப் பிடிக்கும் தலைவராக நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். இன்றைக்கு விஸ்வகர்மாவை போன்ற திட்டங்களை போன்று, இந்தச் சாதிகளை மேலும் மேலும் ஆதரித்து, சாதிவாரி சமூகமாக இந்தச் சமூகத்தை கட்டமைக்கின்ற பணியில் மேலும் தொடர்ந்து ஈடுபட்டு வரும் அரசை தட்டிக் கேட்கின்ற பணியில் இரண்டு கட்சிகள் தான் இன்று முழுமையாக… இன்னும் சொல்லப்போனால், நமது இடதுசாரி தோழர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய இந்தியா கூட்டணியில் உறுதியாக இருக்கின்ற கட்சிகளைத் தவிர, இந்தியாவில் வேறு இயக்கங்கள் இல்லை. இந்த இயக்கங்களை முன்நின்று நடத்துகின்ற தலைவர்கள் யார் என்று பார்த்தால், அங்கே ராகுல் காந்தி நடத்துகிறார். இங்கே தளபதி ஸ்டாலின் நடத்துகிறார்.

இந்த பாசிச அரசியல் என்ன நினைக்கிறது என்றால், இந்த 2 தலைவர்களையும் வீழ்த்த வேண்டும் என்று நினைக்கிறது. அந்த வீழ்த்துவதற்கான சதி வேலை பின்னப்பட்டிருப்பதுதான் இன்று தமிழகத்தில் புதிதாக அரசியலுக்கு வந்ததாக நினைத்துக் கொண்டு, நம்மைப் பார்த்து நீங்கள் பால் பாயாசமா? என்று கேட்கிற கேள்வி இருக்கிறதல்லவா…

எனவே, இதைப் போன்ற இந்த சூழ்நிலையில், நான் உங்கள் அனைவரையும் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதைப் போன்ற சமூகத்தின் நெருக்கடியான காலகட்டத்தில், நமக்கு நல்ல தலைவர்கள் வேண்டும்; நமக்கு நல்ல தொண்டர்கள் வேண்டும்; நம் தொண்டர்கள் பேசுகின்ற கொள்கைகள் வேண்டும்; அவற்றை வழி நடத்திச் செல்கின்ற இயக்கம் வேண்டும். இவை எல்லாவற்றிற்குமாகத்தான் இதைப்போன்ற பிறந்த நாள் விழாக்களை நடத்துகின்றோம். இந்த நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நம்முடைய இளைஞர் அணி தோழர்களுக்கு நன்றி சொல்லி, பாராட்டி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.